மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்

செயல்முறைகள், சென்னை-06.

ந.க.எண். 44750/எஃப் -3/2024 நாள்.29.09.2025.

---------

பொருள் பள்ளிக்கல்வி - 2023-2024 ஆம் கல்வியாண்டு அறிவிப்பு எண்.11, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு, தற்போது பணி நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சியினை பாட வாரியாக 5 மண்டலங்களில் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. பள்ளிக் கல்வித் துறை, மானியக்கோரிக்கை எண்.43, அறிவிப்பு எண்.11
2. பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) கடித ந.க.எண்.34514/வி2/இ1/2023 நாள்.11.07.2023 மற்றும் 24.07.2023
3. இந்நிறுவன இயக்குநரின் கடித ந.க.எண்.44750/எப்3/2024, நாள்.18.07.2023, 05.03.2025, 25.03.2025, 07.07.2025, 08.07.2025, 09.07.2025, 18.07.2025, 22.07.2025, 23.07.2025, 29.07.2025, 01.08.2025 மற்றும் 17.09.2025
4. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநில திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்.0759/அ5/பயிற்சி/ஒபக/2025 நாள்.28.03.2025
5. பள்ளிக்கல்வி இயக்ககத்திலிருந்து பெறப்பட்ட மின்னஞ்சல் நாள்.17.09.2025
6. இந்நிறுவன இணை இயக்குநரின் (பயிற்சி) அறிவுரை நாள். 17.09.2025.

பார்வை (1) இல் காணும் 2023-2024ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் அறிவிப்பு எண்.11 பின்வருமாறு:

" புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியில் சேருவதற்கு முன்னர் 15 நாட்கள் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சிகள் வழங்கப்படும் "

மேற்காணும் அறிவிப்பு சார்ந்து, பார்வை (5) இல் காண் மின்னஞ்சலில் தெரிவித்துள்ளவாறு, 2025-2026 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பணிநியமனம் வழங்கப்பட்ட **தமிழ்** பாட பட்டதாரி ஆசிரியர்களுக்கு **(இணைப்பு (2) இல் உள்ள ஆசிரியர்களுக்கு)** இணைப்பு (1) இல் உள்ள மாநிலக் கருத்தாளர்களைக் கொண்டு, மண்டல அளவிலான பயிற்சியானது Batch I ***06.10.2025 முதல் 10.10.2025 முடியவும் மற்றும்*** Batch II ***13.10.2025 முதல் 17.10.2025 முடியவும் சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.***

| வ.எண். | பாடம் | மண்டலம் | பயிற்சி மையம் / பொறுப்பாளர் விவரம் மற்றும் செலவினம் மேற்கொள்ளும் மாவட்டம் | தொடர்பு அலுவலர் விவரம் மற்றும் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் | சேலம் | ஏற்காடு - சேலம்<br>Principal DIET - Salem<br>சேலம் | திருமதி மகாலட்சுமி,<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>உத்தமசோழபுரம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>98427 48463<br>275 ஆசிரியர்கள் - Batch - I<br>168 ஆசிரியர்கள் - Batch - II |

இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாக இணைப்பு (1) இல் உள்ள கருத்தாளர்கள் மற்றும் இணைப்பு (2) இல் உள்ள பங்கேற்பாளர்களை உரிய நாட்களில் பணிவிடுவிப்பு செய்யுமாறு சார்ந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பங்கேற்பாளர்களுக்கு தங்கும் இட வசதி மற்றும் உணவு போன்றன தளத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், உத்தமசோழவுரம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர் திருமதி மகாலட்சுமி என்பார் இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது. அன்னார் கால அட்டவணையினை பின்பற்றி நடத்திடுமாறும், இப்பயிற்சிக்கான உத்தேச செலவினத் தொகை இணைப்பு (3) இல் உள்ளவாறு அனுமதிக்கப்படுகிறது. மேலும், உத்தேச செலவினத் தொகை அனுப்புதல் குறித்து தங்களது நிறுவன வங்கிக் கணக்கு விவரங்களை இந்நிறுவன

tnscertfsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1. மாநிலக் கருத்தாளர்கள் விவரம்

2. பங்கு பெறும் ஆசிரியர்களின் விவரம்

3. உத்தேச செலவினம்

4. பயிற்சி கால அட்டவணை

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. முதல்வர், சேலம் மாவட்டம், உத்தமசோழபுரம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம். (நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது)

நகல்

1. அரசு முதன்மைச் செயலர், பள்ளிக்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாநிலத்திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-06 அவர்களுக்கு தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
5. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.